**சுருக்கம்**

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் இயங்கும் குழந்தைகள் மையங்களில் அங்கன்வாடி உதவியாளர் நிலை 1 க்கான பணியிடங்களில் நியமிக்கப்பட்ட அங்கன்வாடி உதவியாளர் நிலை –2 பணியாளர்களுக்கு அங்கன்வாடி உதவியாளர் நிலை –1க்கு உரிய சிறப்பு காலமுறை ஊதியம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7(1) துறை**

அரசு ஆணை (நிலை) எண்: 10

நாள் : 08–01–2010
திருவள்ளுவர் ஆண்டு 2040
மார்கழி 24

படிக்கப்பட்டது :

1) அரசாணை (நிலை) எண்57, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 10.4.2002.
2) அரசாணை (நிலை) எண்.17, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 30.1.2004.
3) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் கடிதம் எண்.இ3–2/15379/2008, நாள் 8.7.2008.
4) முதன்மை செயலர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் கடிதங்கள் எண்.15379/இ3.2/2008, நாள் 9.10.2009 மற்றும் 4.11.2009.
5) அரசாணை (நிலை) எண் 234, நிதி (ஊதியப் பிரிவு) துறை, நாள் 1.6.2009

*****

பார்வை 1ல் கண்ட அரசாணையில், ஒரு குழந்தைகள் மையத்திற்கு ஒரு அங்கன்வாடி பணியாளர் மற்றும் ஒரு அங்கன்வாடி உதவியாளர் வீதம் பணியிடம் அனுமதிக்கப்பட்டது என்றும், பார்வை 2ல் கண்ட அரசாணையில் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட இரட்டை மையங்கள் / புது மையங்களில் உபரியாக உள்ள உதவியாளர்களை கொண்டு அங்கன்வாடி உதவியாளர் நிலை-1 காலி பணியிடங்களில் மறு பணி நியமனம் செய்யப்பட்டது என்றும், தற்சமயம் மையத்திற்கு ஒரு உதவியாளர் வீதம் பணிபுரிந்து வருகிறார்கள் என்றும், அனைத்து பணிகளையும் ஒரு அங்கன்வாடி உதவியாளரே கவனித்து வருகிறார் என்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் சிறப்பு ஆணையர் தெரிவித் துள்ளார்.

2) மேலும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட ஆணையர் அவர்கள் அங்கன்வாடி உதவியாளர் நிலை-2 (உபரி) லிருந்து நிலை-1க்கு உயர்த்துவதற்கு விதிமுறைகள் மற்றும் கல்வித் தகுதி ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும், அரசாணை (நிலை) எண் 57,

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 10.04.2002ல் அறிவுறுத்தியவாறு, உபரி அங்கன்வாடி உதவியாளர்களை (நிலை-2 உதவியாளர்களை) காலி பணியிடங்களில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, உதவியாளர் நிலை-1 ஆக பணியமர்த்தப்பட்டு, பணிபுரியும் அவர்களுக்கு நிலை-1 ற்கான மதிப்பூதியம் வழங்கப்படாமல், ஏற்கனவே அங்கன்வாடி உதவியாளர் நிலை-2ல் பெற்று வந்த ஊதியமே பெற்று வருகிறார்கள் என்றும், அரசாணைகளின்படி உபரியாக உள்ள அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை -2லிருந்து நிலை-1க்கான காலி பணியிடத்தில் மறு பணிநியமனம் செயயப்பட்ட அங்கன்வாடி உதவியாளர்களுக்கு நிலை-1க்கான மதிப்பூதியம் வழங்க உரிய ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3) இந்நிலையில், 21–11–2009 அன்று தமிழ்நாடு சத்துணவு மற்றும் குழந்தைகள் நல மைய பணியாளர்கள் சங்கங்களின் சார்பாக நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த நன்றி பாராட்டு விழாவின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், **"அங்கன்வாடி உதவியாளர் நிலை இரண்டு ஆக பணியமர்த்தப்பட்டவர்களை, காலிப்பணியிடங்களில் நிலை ஒன்று ஆக நியமிக்கும்போது அவர்களுக்கு நிலை இரண்டுக்கான ஊதியம் மட்டுமே வழங்கப்படுவதை மாற்றி, நிலை ஒன்று பதவிக்கான ஊதியம் வழங்கப்படும். இதனால் 3,784 பணியாளர்கள் பயன் பெறுவார்கள்" என அறிவிப்பு வெளியிட்டார்கள்.**

4) எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், 30 மாவட்டங்களில் அங்கன்வாடி உதவியாளர் நிலை–2 பணியிடத்திலிருந்து காலியாக இருந்த அங்கன்வாடி உதவியாளர் நிலை-1 பணியிடத்திற்கு பணியமர்த்தப்பட்ட 3784 அங்கன்வாடி உதவியாளர்களுக்கு அங்கன்வாடி உதவியாளர் நிலை-1க்கு உரிய சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கி அரசு ஆணையிடுகிறது. இவ்வரசாணை வெளியிடப்படும் நாள்முதல் இது நடைமுறைபடுத்தப்படும்.

5) இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்.

2236–சத்துணவு – 02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 101 சிறப்பு சத்துணவுத் திட்டம் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் II மாநிலத் திட்டம் JN – தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம் நிலை – 3 – 01. சம்பளங்கள் (த.தொ.கு.2236 02 101 JN 0109)

6) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.2/JS(APA)/10, நாள்.07.01.2010– ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. இராம மோகனராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை செயலர் / சிறப்பு ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை – 113.

/த.பி.பா/

அனைத்து மாவட்டத் திட்ட அலுவலர்கள்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்
(முதன்மை செயலர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சென்னை–113 வழியாக)
அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
மாநில தலைமைச் கணக்காயர், சென்னை –18 (பெயரிடப்பட்ட உறையில்)
மாநில தலைமைக் கணக்காயர் (தணிக்கை–I / II) சென்னை–18.

நகல்:-

மேதகு ஆளுநரின் செயலர், இராஜ் பவன், சென்னை–32.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை–9.
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு சமூகநல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் அனைத்து பிரிவுகள்
நிதித்துறை, சென்னை–9 / பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை–9.
திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

09/01/10